## ஒதுக்கீட்டுத் தலைப்பு 314 – தென்மாகாண சபை

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2012

---

### 1. தூரநோக்கும் செயற்பணியும்

### (அ) தூரநோக்கு

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் தென்மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தென்மாகாண சபை மக்களின் நலனுக்காக செயற்திட்டத்தை அமுலாக்கும் நோக்கில் மாகாண நிர்வாகம் தொடர்பாக தொழிற்துறை மையமாக நிலவியமை மாகாண அரசாங்கத்தால் இனங்காணப்பட்ட தேசிய முன்னுரிமைக்கும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்கு சாதகமானதும், செயற்திறன்மிக்கதும், வினைத்திறனானதுமான அரச சேவையையும் போதிய பிராந்திய நிர்வாக முறைமையை உறுதிப்படுத்தல்.

### (ஆ) செயற்பணி

- மாகாண மட்டத்தில் திட்டங்களை தயாரித்து அபிவிருத்தி திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- மேலும் சீரான பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக வளங்களைப் பயன்படுத்தி சீராக்குவதற்காக ஒருங்கிணைந்த வழியை ஏற்படுத்தல்.
- விரிவான தேசிய கொள்கையையும் நோக்கத்தின் படி கிரா சேவைப் பிரிவு, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் மக்கள் பங்கேற்பு மற்றும் இயங்கும் நிலையங்களை உறுதிப்படுத்தல்.
- அரச மற்றும் சமூக சேவைகள் மனித வள முகாமைத்துவம் தொடர்பான ஆக்கபூர்வமான கொள்கைகளைத் தயாரித்தல்.

- அரச மற்றும் சமூக சேவைகள் மனித வள முகாமைத்துவம் தொடர்பான ஆக்கபூர்வமான கொள்கையைத் தயாரித்தல்.

- அரச மற்றும் சமூக சேவைகள் மனித வள முகாமைத்துவம் தொடர்பான ஆக்கபூர்வமான கொள்கைகளைத் தயாரித்தல்.

- அரச மற்றும் சமூக சேவைகள் தொடர்பான விளைதிறன்மிக்கதும் கௌரவத்தையும் மேம்படுத்துவதற்காக புதிய முகாமைத்துவக் கட்டமைப்பையும் முறைமையையும் செயற்படுத்தல்.

- பெறுமதி முறைமையை ஏற்படுத்தல் (விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட எண்ணங்கள், பொறுப்பளி தன்மை, வளங்கள் தொடர்பான ஆய்வு நிலை, பக்கச்சார்பற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை)

- தனியார் பிரிவிலும் அரச பிரிவிலும் பதவியணி பயிற்சி தேவைப்பாட்டை இனங்கண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி இதற்காக வசதியளித்தல்.

- நிலவும் உள்ளக மற்றும் நிதிச் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமைகளை மேம்படுத்தல்.

- மாகாணத்தின் குறித்த பிரதேசங்களிற்கிடையிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிற்கு இடையிலும் நிலவும் அபிவிருத்தி இடைவெளியைக் குறைத்தல்.

- மாகாணத்தின் பொருளாதார விருத்தியை விரைவுபடுத்தல்.

- மனித முன்னேற்ற நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

- தீர்க்கமான விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைக்கு தனியார் பிரிவின் பங்களிப்பை விருத்திசெய்தல்.

- மக்கள் பங்களிப்புக்காக நிலவும் நிறுவனங்களையும் இயலுமையையும் வலுப்படுத்தல்.

- புதிய செயற்திட்டங்களையும் நிறுவனங்களையும் ஆரம்பிப்பதற்கு வசதியளித்தல்.

## 2. ஒதுக்கீட்டுக் கணக்குகள்

### மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக தென்மாகாண சபைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 14,082,989,000 ஆகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் இதில் ரூபா 13,011,900,000 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்புகள் ரூபா 1,071,089,000 ஆகக் காணப்பட்டதுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டின் 7.6 சதவீதத்தைக் கொண்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழும் | 11,802,989,000 | 11,917,989,000 | 11,399,000 | 0.1 |
| மூலதனம் | 2,165,000,000 | 2,165,000,000 | 1,059,690,000 | 49 |
| | 13,967,989,000 | 14,082,989,000 | 1,071,089,000 | |